Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JANUARY 27 2025

திங்கட்கிழமை, 27 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 145 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

ஊழல் மற்றும் மோசடி விசாரணைகளில் அரசாங்கத்தின்

# “தலையீடு இல்லை”



**அடையாளம் காணப்பட்ட 11 முக்கிய வழக்குகளில் 3 வழக்குகள் ஜனவரியில் தாக்கல் செய்யப்பட உள்ளன**

**சட்டச் செயல்பாட்டின் நேர்மையை நிலைநாட்ட விசாரணைகள் சுதந்திரமாக நடத்தப்பட வேண்டும்**

கடந்த நிர்வாகங்களின் போது தலையீடுகளை தடுக்கும் பொருட்டு வழக்கை ஒத்தி வைத்ததாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரியொருவர் ஒப்புக்கொண்டதாக ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி, குறித்த அதிகாரியை மேற்கோள் காட்டி, “அப்போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அது அவர் பதவி நீக்கப்படுவதற்கு அல்லது வழக்கை சீர்குலைக்க வழிவகுத்திருக்கும். எனவே, நீதிக்கான உறுதியான அரசாங்கம் ஆட்சிக்கு வரும் வரை வழக்கை தக்கவைக்க அந்த அதிகாரி முடிவு செய்தார். தனிப்பட்ட இடர்பாடுகள் இருந்தபோதிலும் அவர் நீதிக்கு முன்னுரிமை அளித்துள்ளார்” என அதிகாரியை ஜனாதிபதி பாராட்டினார்.

தொடர்ச்சி P2



## இந்தியாவின் 76 ஆவது குடியரசு தின நிகழ்வுகள்

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தின நிகழ்வுகள், இலங்கையில், வெகுசிறப்பாக இடம்பெற்றன. இந்திய உதவி உயர்ஸ்தானிகர்,

டாக்டர் சத்யஞ்சல் பாண்டே தலைமையில், கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில், ஞாயிற்றுக்கிழமை (26) இந்திய தேசிய கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன. (மேலதிக படங்கள் பக்கம் 05).

(படங்கள்: கித்சிறி டி மெல்)

## “மிகையொலிக்கு கட்டுப்பாடு”



இரவு விருந்துகளின் போது மிகையொலி எழுப்பும் கருவிகளை பயன்படுத்துவதற்கான நேர வரம்பை இரவு 10 மணி வரை மட்டுப்படுத்தும் வகையிலான திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி நிதிய சேவை பிரதேசத்துக்கு செல்கிறது

மக்களுக்கு மிகவும் பயனுள்ள சேவைகளை வழங்கும் நோக்கில், ஜனாதிபதி நிதிய சேவை, பிரதேச செயலக மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட உள்ளது. இதன் உத்தியோகபூர்வ நிகழ்வு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் பெப்ரவரி 7ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது.

தொடர்ச்சி P2

ජනාධිපති අරමුදල
ஜனாதிபதி நிதியம்
President's Fund

## யோசித்தவுக்கு விளக்கமறியல்



ரத்மலானை பகுதியில் 3,40,000,000 ரூபாய்க்கு நிலம் மற்றும் வீடு வாங்கியது தொடர்பாக பணமோசடி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவை 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அளுத்கடை நீதவான் பவித்ரா சஞ்சீவனி சனிக்கிழமை (25) மாலை உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



## இந்திய உப்பு இன்று வருகிறது

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 4,500 மெட்ரிக் டன் உப்பு அடங்கிய முதல் கப்பல் இலங்கையை திங்கட்கிழமை (27) வந்தடைய உள்ளதாக மாநில வணிக இதர கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 6 கிலோ 800 கிராம் என்.சியுடன் ஒருவர் கைது

ரஞ்சித் ராஜபக்ஷ

6 கிலோ 800 கிராம் என்.சி என்ற போதைப்பொருளுடன் நபர் ஒருவர் ஹட்டன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

ஹட்டன் பொலிஸ் பிரிவு புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், ஹட்டன் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள், ஹிஜிராபுர பகுதியில் உள்ள ஒரு வீட்டை சோதனைக்கு உட்படுத்தி அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப்பொருட்களைக் கைப்பற்றினர்.

சந்தேக நபர் பொகவந்தலாவ



பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகவும், இதில் பாடசாலை மாணவர்கள்

தொடர்ச்சி P2

## சுமந்திரனுக்கு விசேட சலுகை?

பு.கஜிந்தன்

இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய் பாதுகாவலர்கள் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்த பின்னர் செலவினங்களை குறைக்க வேண்டும் என்ற அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் உட்பட



பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மெய்பாதுகாவலர்களின் பாதுகாப்பை பெற்றுக் கொள்ளவில்லை.

இருப்பினும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு இரண்டு மெய் பாதுகாவலர்கள் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



## “அள்ளி வழங்கியது போன்று தீர்வையும் வழங்கவும்”

ஏ.எச் ஹஸ்பர்

தேர்தல் காலத்தின் போது அநுரகுமார திசாநாயக்க வாக்குறுதிகளை அள்ளி வழங்கியது போன்று காலம் தாழ்த்தாது உடனடியான தீர்வாக வேலைவாய்ப்புகளை வழங்குமாறு வடகிழக்கு பட்டதாரிகள் ஒன்றியத்தின் உறுப்பினர் எம். ஐ. எம் புர்கான் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## காங்கேசன்துறைக்கு இரவு தபால் ரயில்

கொழும்பு கோட்டைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இரவு தபால் ரயிலை ஜனவரி 31 ஆம் திகதி முதல் தினமும் இயக்க ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.



தொடர்ச்சி P2



## “அரிசியை அதிக விலைக்கு விற்றால் அறிவிக்கவும்”

**திடீர் சுற்றிவளைப்புகளை தீவிரப்படுத்தவும் யோசனை**

எம்.எஸ்.எம்.ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் அரிசியை பதுக்கி வைத்து சந்தையில் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்து, கூடுதல் விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் அறியத்தருமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி, அம்பாறை மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக கர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார ஞாயிற்றுக்கிழமை (26) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புலிகளின் தங்கத்தை தேடிய 10 பேர் கைது

**அதிநவீன ஸ்கேனர் இயந்திரமும் கைப்பற்றப்பட்டது**

கிளிநொச்சி திருநகரில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட தங்கத்தைத் தோண்டிக் கொண்டிருந்த பத்து பேர் சனிக்கிழமை (25) தரை ஸ்கேனருடன் கைது செய்யப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார்தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், கிளிநொச்சி காவல்துறையினருடன் இணைந்து நடத்தப்பட்ட சோதனையில் சந்தேக நபர்களும் அகழ்வாராய்ச்சி உபகரணங்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அகழ்வாராய்ச்சி நடைபெறும் இடத்தில் தங்கம் இருப்பதாக நபர் ஒருவர் சந்தேக நபர்களுக்குத் தெரிவித்ததாகவும், அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படுவதற்கு முன்பு அந்த இடம் ஸ்கேனர் மூலம் ஆய்வு செய்யப்பட்டதாகவும்பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின்

## பொன்விழா நிகழ்வுகளை ஏப்ரலில் நடத்த ஏற்பாடு

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 50 வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஏப்ரல் 26,27மற்றும் 28 ஆகிய தினங்களில் பொன்விழா நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் இமானுவேல் ஆனோல்ட் தெரிவித்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலை பீடத்தில் கல்வி கற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பொன் விழா நிகழ்வை நடத்த தீர்மானித்துள்ளனர். இதற்காக உருவாக்கப்பட்ட ஏற்பாட்டுக் குழுவின் ஊடக சந்திப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை (25) இடம் பெற்றது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "தலையீடு இல்லை"

ஊழல் மற்றும் மோசடி விசாரணைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் இன்றி பொலிஸ் உட்பட சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் செயற்படுவதாக ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பிணை வழங்குவது சட்டச் செயல்பாட்டின் ஒரு பகுதி என்றும், மாறாக அது பாகுபாட்டின் பொருட்டு வழங்கப்படுவதில்லை என்றும், நடந்துகொண்டிருக்கும் விசாரணைகள் குறித்த கரிசனங்களை ஜனாதிபதி வெளியிட்டார். முழுமையான ஆதாரங்கள் சேகரிப்பு மற்றும் சரியான நேரத்தில் வழக்கு பதிவு செய்வது முன்னுரிமையாக உள்ளது, என அவர் மேலும் கூறினார்.

சட்டமா அதிபர் திணைக்களம் 11 முக்கிய வழக்குகளை அடையாளம் கண்டுள்ளதுடன், மூன்று வழக்குகள் ஜனவரியில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

"நாங்கள் தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில் வழக்குகளைத் தேர்ந்தெடுக்கவில்லை. சட்டச் செயல்பாட்டின் நேர்மையை நிலைநாட்ட விசாரணைகள் சுதந்திரமாக நடத்தப்பட வேண்டும்," என்றார்.

## "அள்ளி வழங்கியது போன்று தீர்வையும் வழங்கவும்"

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (26) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

"அரசாங்கத்தின் அசமந்த போக்கு காரணமாக வேலையற்ற பட்டதாரிகள் பல துன்பங்களை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள். பெரும் பொருளாதார கஷ்டம் ஈஸ்டர் தாக்குதல் டெங்கு கொரோனா என பல சவால்களுக்கு முகங்கொடுத்து உள்வாரி வெளிவாரி பட்டங்களை சுமார் 4, 5 வருட கற்கை களை சிறப்பு பொது பட்டம் என கற்று பூரணமாக்கியதன் பின்பும் தீர்வில்லாமல் தவிக்கிறோம். எங்களை போன்ற இளைஞர் யுவதிகளின் குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் வாக்குகளை வைத்து ஆட்சியை பிடித்த அரசாங்கம் எதிர்வரும் வரவு செலவு திட்டம் ஊடாக தீர்வை வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்காக 30 ஆயிரம் வெற்றிடங்கள் கிராம சேவகர்களுக்காக 3000 க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர். இதை பட்டதாரிகளுக்கு பரீட்சை இன்றி பொது நியமனங்கள் ஊடாக அரச துறையில் நியமனங்களை வழங்க வேண்டும் பல் வேறு பொருளாதார கஷ்டங்களுடன் திருமணம் முடித்த நிலையில் வாழும் எங்களை நிராகரிக்காது கற்ற கல்விக்கான பட்டத்துக்கு தீர்வை தாருங்கள். போட்டி பரீட்சை என்ற பெயரில் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியாத கேள்விகளை எடுத்து தோல்வியை சந்திக்கின்ற நிலை ஏற்படுகிறது.

தற்போது கற்கும் உயர்தரம் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படுகிறது. 2021ம் ஆண்டு முதல் உள்வாரி வெளிவாரி பட்டங்களுடன் பலர் பட்டதாரிகளாக தொழில் இன்றி அலைகின்றனர். இதனை கருத்தில் கொண்டு புதிய அரசாங்கத்தின் கீழ் பொதுவான நியமனங்களை எங்களுக்கு வழங்க ஆளுநர்கள், துறைசார் அமைச்சுக்கள் புதிய ஜனாதிபதி போன்றோர்கள் மிக கரிசனையுடன் செயற்படுங்கள் " என மேலும் கோரிக்கை விடுத்தார்

## பொன்விழா நிகழ்வுகளை ஏப்ரலில் நடத்த ஏற்பாடு

பொன்விழா நிகழ்விற்கு புலத்திலும், நாட்டிலும் உள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவர்கள், தொழில் துறை சார்ந்தவர்கள், புலம்பெயர் நாட்டில் வசித்து வருபவர்கள் அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி முதல் நாள் நிகழ்வு காலை 09 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதன்போது பொன் விழா தொடர்பான நூல் ஒன்று வெளியீடு செய்யப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து கலை பீடத்தைச் சேர்ந்த மூத்த இளைப்பாறிய விரிவுரையாளர்கள் கௌரவிக்கபடவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வாக கலை பீடத்தைச் சேர்ந்த பழைய மாணவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் மென்பந்து, கரப்பந்து, உள்ளிட்ட விளையாட்டுக்களுக்கும் பாரம்பரிய உள்ளக, வெளியக விளையாட்டுகளும் இடம்பெறவுள்ளன.

இறுதி நாள் நிகழ்வாக பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து குருதிக் கொடை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அனைவருக்குமான இராப்போசன நிகழ்வும் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

இந்த நிகழ்வுக்காக ஏற்பாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம், பல்கலைக்கழகத்தின் மூத்த பழைய மாணவரும் பேராசிரியருமான கலாநிதி செல்லத்துரை சேதுராஜா, முன்னாள் பாடசாலை அதிபர் அருணாச்சலம் அகிலதாஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழக பழைய மாணவர் ஒன்றியத்தில் பொறுப்பாளர்களில் ஒருவரான மிதிலைச் செல்வி ஸ்ரீபத்மன் ஆகியோர் பொன்விழா நிகழ்விற்கு அனைவரும் வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

## மத்திய கிழக்குக்கு ஜனாதிபதி விஜயம்

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, பெப்ரவரி மாத நடுப்பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று அரச தலைவர்களைச் சந்திக்க உள்ளார்.


எரிசக்தி துறையின் வளர்ச்சிக்காகவே இந்த பயணம் மேற்கொள்வதாக ஹோமாகம, பிடிபனவில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

இலங்கையின் வரலாற்றில், சில அரசாங்கங்கள் தலைமுறை தலைமுறையாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாட்டில் அரசாங்கங்கள் குண்டர்களைப் பயன்படுத்தி கைப்பற்றப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன. ஈஸ்டர் தாக்குதல்கள் போன்ற சதித்திட்டங்கள் மூலம் அரசாங்கங்கள் கைப்பற்றப்பட்ட நிகழ்வுகளும் உள்ளன. அந்த விசாரணைகள் நன்றாகப் போகிறது.

மேலும், இலங்கை வரலாற்றில் இவ்வளவு வலுவான கருத்தை உருவாக்கவோ அல்லது அதற்குள் பணத்தை செலுத்தவோ இலங்கை ஊடகங்களைப் பயன்படுத்தாமல் உருவாக்கப்பட்ட முதல் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆகும்.

சர்வதேச ஆதரவு இல்லாமல் நாம் முன்னேற முடியாது. மத்திய கிழக்கு பிராந்திய தலைவர்களைச் சந்திப்பதன் நோக்கம் அந்த ஆதரவைப் பெறுவதாகும் என்றார்.

## தேடுதல் நடத்தச் சென்ற பொலிஸ் அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு



மீகஹகிவுல, அக்கலஉல்பத கிராமத்திற்கு மேலே உள்ள காட்டில் சட்டவிரோத கஞ்சா தோட்டத்தை சோதனை செய்ய ஞாயிற்றுக்கிழமை(26) மதியம் சென்ற கண்டகெட்டிய பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர், துப்பாக்கி வெடித்ததில் படுகாயமடைந்து மீகஹகிவுல மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் ஆபத்தான நிலையில் பதுளை போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் கண்டகெட்டிய பொலிஸில் பணியாற்றும் ஜனக புஷ்பகுமார (36) என்பவர் ஆவார். மீகஹகிவுலாவில் உள்ள அக்கலஉல்பதா கிராமத்திற்கு மேலே உள்ள காட்டில் சட்டவிரோத காசிப்பு காய்ச்சப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, 26 ஆம் திகதி மதியம் கண்டகெட்டிய பொலிஸ் அதிகாரிகள் குழு அக்கலஉல்பதாவில் ஒரு பெரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்தது.

சோதனை நடத்த அங்கு சென்ற அதிகாரிகள் காட்டில் இருந்து துப்பாக்கிச் சத்தம் வருவதைக் கேட்டனர், தேடி பார்த்தபோது, பொலிஸ் அதிகாரி, வயிறு மற்றும் முதுகில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

## 6 கிலோ 800 கிராம் என்.சியுடன் ஒருவர் கைது

உட்பட பலர் இலக்குவைத்து வைத்து என்.சி விற்பனைச் செய்யப்படுவதாகவும் ஹட்டன் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

## யோசித்தவுக்கு விளக்கமறியல்

சந்தேக நபரை 27 ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்றும், விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து அன்றைய தினம் நீதிமன்றத்திற்கு அறிவிக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், குற்றப் புலனாய்வுத் துறையினர் பெலியத்த அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகில் சந்தேக நபரான யோஜித ராஜபக்ஷவை கைது செய்தனர்.

நிலத்தை வாங்குவதற்கு பணம் எவ்வாறு பெறப்பட்டது என்பதை தெளிவாக நிறுவ முடியாததால் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

## இந்திய உப்பு இன்று வருகிறது

நாட்டின் உப்பு பற்றாக்குறைக்கு தீர்வாக 30,000 மெட்ரிக் டன் உப்பை இறக்குமதி செய்ய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது, மேலும் அரசாங்கத்தின் சார்பாக உப்பை இறக்குமதி செய்ய மாநில வணிக இதர கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, இந்தியாவில் இருந்து இரண்டு விநியோகஸ்தர்களுக்கு உப்பு இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது, மேலும் ஜனவரி 31 ஆம் திகதிக்குள் 12,500 மெட்ரிக் டன் உப்பை இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக நிறுவனம் கூறுகிறது.

## காங்கேசன்துறைக்கு இரவு தபால் ரயில்

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து இரவு 8.00 மணிக்குப் புறப்படும் ரயில், மறுநாள் அதிகாலை 4.35 மணிக்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தை வந்தடையும் என்று ரயில்வே துறை தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து இரவு 8.00 மணிக்குப் புறப்படும் ரயில், மறுநாள் அதிகாலை 4.40 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும் என்றும் திணைக்களம் கூறுகிறது.

## புலிகளின் தங்கத்தை தேடிய 10 பேர் கைது

போரின் போது, இந்த இடத்தில் புலிகள் அமைப்பு தங்கத்தை மறைத்து வைக்கவில்லை என்றும், சந்தேக நபர்கள் நீண்ட காலமாக சம்பந்தப்பட்ட இடத்தை ஆய்வு செய்த பின்னர் அகழ்வாராய்ச்சிகளை நடத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. அகழ்வாராய்ச்சி இடத்திற்குள் தண்ணீர் பாய்வதால், அதிலிருந்து தண்ணீரை அகற்ற நீர் பம்புகள் பயன்படுத்தப்படவில்லை. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கேகாலை, மாவனெல்ல மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## "மிகையொலிக்கு கட்டுப்பாடு"

காலி பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் நடைபெற்ற இரவு விருந்தில் இரவு 10 மணிக்குப் பிறகு மிகையொலி எழுப்பும் கருவிகள் பயன்படுத்த பொலிஸார் அனுமதிக்காதபோது ஏற்பட்ட பிரச்சனைக்குரிய சூழ்நிலை ஏற்பட்டது. இதுதொடர்பில் கருத்துரைக்கும் போதே, அமைச்சர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது, பல ஆண்டுகளுக்கு முன்பு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு என்றும், அந்தத் தீர்ப்பைத் திருத்தி, அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியுமென நம்புவதாகவும் அமைச்சர் கூறினார்.

## "அரிசியை அதிக விலைக்கு விற்றால் அறிவிக்கவும்"

அரிசி களஞ்சிய சாலை மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு தொடர்ச்சியாக சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அரிசி களஞ்சிய சாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்கள் சோதனை மேற்கொள்ளப்பட்டு எச்சரிக்கையுடன் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரிசியை கூடுதல் விலைக்கு விற்பனை செய்த களஞ்சியசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரிசி விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த தவறிய வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி நிதிய...

அதன்படி, கொழும்பிற்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த ஜனாதிபதி நிதியத்தின் அலுவலக சேவைகளை, நாடு முழுவதும் உள்ள 341 பிரதேச செயலகங்களில் நிறுவப்படும் துணை அலுவலகங்கள் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பிரதேச செயலகங்களில் இந்த முன்னோடித் திட்டம் ஏற்கனவே தொடங்கி உள்ளது, நாடு முழுவதும் அதன் செயல்படுத்தல் பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் தொடங்கும்.

ஜனாதிபதி நிதியத்தின் புதிய திட்டம் குறித்து பிரதேச செயலாளர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிகழ்நிலை கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டன.

ஜனாதிபதி நிதியத்திற்கான புதிய டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வலையமைப்பு திட்டத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு மிகவும் திறமையான மற்றும் பயனுள்ள சேவையை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட கூடுதல் செயலாளருமான ரோஷன் கமகே தெரிவித்தார்.

# மாணிக்கக்கல் அகழ்ந்த நால்வர் கைது

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போற்றி தோட்டத்தில் சட்டவிரோதமாக மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நான்கு சந்தேக நபர்கள், நோர்வூட் பொலிஸ் அதிகாரிகளால் சனிக்கிழமை (25) இரவு கைது செய்யப்பட்டனர்.

காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு முக்கியமாக பாயும் கெசல்கமுவ ஓயா விற்கு நீர் வழங்கும் போற்றி தோட்ட ஸ்ட்ரீம் ரிசர்வ் பகுதியில் ஏராளமானோர் சட்டவிரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.



சந்தேக நபர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்குப் பய ன்படுத்தப்பட்ட பல உபகரணங்கள் மற்றும் மின்சார மோட்டார்கள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நோர்வூட் மற்றும் பொகவந்தலாவ பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்றும் நோர்வூட் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சோதனையின் போது, சுமார் 50 பேர் அந்த இடத்தில் சட்டவிரோதமான அகழ்வில் ஈடுபட்டதாகவும் நான்கு பேர் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும், ஏனைய சந்தேக நபர்கள் தப்பி ஓடி விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

# சேவைக்கு பாராட்டு

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வும் வருடாந்த ஒன்றுகூடல் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகவும், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம். முஜீப், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

சாய்ந்தமருது வைத்தியசாலையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் இந்நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் குறித்த வைத்தியசாலையில் பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்றவர்கள் இதன்போது பாராட்டி பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் பாடசாலைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்திய வைத்தியசாலை நலன்புரி சங்க உறுப்பினர்கள் உடைய பிள்ளைகளும் இந்நிகழ்வின் போது அதிதிகளினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை, கலாசார நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நூருல் ஹுதா உமர்






















# காலியில் கோர விபத்து: 29 பேர் படுகாயம்

காலி, இமதுவ- அங்குலுகஹா சந்திப்பில் மூன்று பேருந்துகள், ஞாயிற்றுக்கிழமை (26) காலை 8:30 மணியளவில் மோதியதில் குறைந்தது 29 பயணிகள் காயமடைந்தனர்.

இரண்டு தனியார் பயணிகள் பேருந்துகளும் அலுவலக ஊழியர்களை ஏற்றிச் செல்லும் ஒரு பேருந்தும் மோதிக்கொண்டன.

ஒரு பேருந்து நிறுத்தப்பட்டபோது, மற்றொரு பேருந்து அதன் பின்னால் இருந்து மோதியதால், சங்கிலித் தொடர்பற்று விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த 23 பயணிகள் இமதுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் மேலும் ஆறு பேர் மேலதிக சிகிச்சைக்காக கராபிட்டிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

# மஞ்சள், ஏலக்காய் மீட்பு; இருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - கற்பிட்டி, கீரிமுந்தல் மற்றும் துறையடி ஆகிய கடல் பிரதேசங்களில் இருந்து ஒரு தொகை மஞ்சள் மற்றும் ஏலக்காய் என்பவற்றுடன் இரு சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமை (24) அன்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கட்டளையின் விஜய நிறுவன கடற்படையினர் வெள்ளிக்கிழமை (24) கற்பிட்டி கீரி முந்தல் கடற்பிரதேசத்தில் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையின் போது 8 உர மூட்டைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 240 கிலோ கிராம் ஏலக்காய் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் சந்தேகத்திற்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்ட டிங்கி இயந்திர படகு ஒன்றை கடற்படையினர் சோதனையிட்ட போது, குறித்த டிங்கி இயந்திர படகில் இருந்து 40 உர மூட்டைகளில் அடைக்கப்பட்ட நிலையில் 1,231 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மற்றும் 3 பொதிகளில் அடைக்கப்பட்ட 102 கிலோ கிராம் ஏலக்காய் என்பன



கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் 23 மற்றும் 48 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவருடன் , கைப்பற்றப்பட்ட உலர்ந்த மஞ்சள் , ஏலக்காய் மற்றும் டிங்கி இயந்திர படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்ப ட்டுள்ளதாக கட றப்படையினர் குறிப்பிட்டனர்.

# வாழைச்சேனை மாயமான இருவரும் சடலங்களாக மீட்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனையில் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சனிக்கிழமை (25) அடித்துச் செல்லப்பட்ட காணாமல் போன இருவரும் ஞாயிற்றுக்கிழமை (26) சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை புலிப்பாஞ்சிக்கல் பகுதியில் சனிக்கிழமை (25) மாலை இரண்டு பேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனதாக வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைத்த செய்தியின் அடிப்படையில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்திவெளி பகுதியைச் சேர்ந்த 52 மற்றும் 71 வயதுடைய இருவரே




காணாமல் போயிருந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.


இந்த இருவரும் காய்கறிகளை சேகரித்துவிட்டு வயல்களில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தபோது புலிப்பாஞ்சிகல் ஓயாவின் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நீரில் மூழ்கிய தம்பதியினர் மீட்பு

நீரில் மூழ்கிய விபத்தில் இருந்து வெளிநாட்டு தம்பதியினரை அஹுங்கல்ல பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினர் மீட்டுள்ளனர்.

அஹுங்கல்ல கடற்கரையில் சனிக்கிழமை (25) நீச்சலடிக்கச் சென்ற ஒரு வெளிநாட்டுத் தம்பதியினர், ஒரு பெரிய அலையில் சிக்கிக் கொண்டனர். அவர்கள், பொலிஸ் உயிர்காக்கும் பிரிவினரரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

51 மற்றும் 46 வயதுடைய ரஷ்ய தம்பதியினரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.




# வாகன விபத்தில் ஒருவர் பலி

ரஸீன் ரஸ்மின்

கொழும்பு - புத்தளம் பிரதான வீதியின் லுணுஓயா பாலத்திற்கு அருகில் சனிக்கிழமை (25) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒருவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் மீது புத்தளத்தில் இருந்து சிலாபம் நோக்கி பயணித்த கார் ஒன்று மோதிய நிலையில் தூக்கி வீசப்பட்டு, எதிரே பயணித்த மற்றுமொரு காருடனும் மோதி படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் அவரை உடனடியாக சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் இரண்டு கார்களின் சாரதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியா விபத்தில் மாநகர ஊழியர் பலி


செ.திவாகரன், டி.சந்ரு

நுவரெலியா காமினி தேசிய பாடசாலை அருகில் இருந்து விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு செல்லும் வீதியில் வெள்ளிக்கிழமை (24) இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா மாநகர சபையில் நீர் வழங்கல் பிரிவில் தொழில் புரிந்து வரும் நுவரெலியா ஹாவாஎலிய பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராஜ் நடராஜ் (வயது 41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள், சமுர்த்தி வங்கிக்கு அருகில் விபத்துக்குள்ளான நிலையில் கிடந்துள்ளது. அதனை அவதானி த்தவர்கள் நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்கு தெரிவித்துள்ளனர். விரைந்து செயற்பட்ட பொலிஸார், சம்பவ இடத்தில் இருந்து மோட்டார் சைக்கிளையும் தலைக்கவசத்தையும் மீட்டு, பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்நிலையில், விபத்து இடம்பெற்ற



இடத்தில் உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து சனிக்கிழமை (25) தேடுதல் நடத்திய போது நுவரெலியா கிரகறி வாவிக்குச் செல்லும் கிளை ஆறான தலகல ஓயா வெள்ளை பாலத்தின் கீழ் பகுதியில் சடலமாக கிடந்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் பார்வையிட்டு பின்னர் சடலத்தை மீட்டு சட்ட வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## SALE OF REGISTERED VEHICLE

Vehicle inspection daily from 09.00 AM to 15.00 PM offers are called for the sale of the above vehicle from 27TH January to 31st January 2025 till 2.00 pm Offer forms are available on non-Refundable payment of Rs.300/- at No.135, Galle Road, Wellawatte, Colombo-6. Management reserves the right to cancel or withdraw any offers made in respect of above.

**Inspection on prior appointment**

**Tel: 0114 343 130, 0768 371 340, 0778 936 453**

| Description | Yom | Yard |
|---|---|---|
| WP KN-XXXX SUZUKI GBD-HA24V | 2008 | No. 375/21/A, Makumbura, Pannipitiya, Kottawa |

# வழிமுறைகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும்

ஆட்சி மாறியதன் பின்னர், முந்தைய அரசாங்கங்களில் இருந்தவர்கள் செய்த ஊழல், மோசடிகள் தொடர்பாக திடீர், திடீரென கைதுகள் இடம்பெறுவது, நீதிமன்றங்களின் ஊடாக விளக்கமறியல் வைப்பது பின்னர் பின்னர் பிணையில் விடுவிப்பதுமே இருந்து வந்தது. நீதிமன்ற கட்டமைப்பை பொறுத்தவரையில், இதுவே சாதாரண முறைமையாகும்.

எனினும், பிணையில் விடுவிக்கப்படும் முன்னாள், இந்நாள் அரசியல்வாதிகள், அல்லது முக்கியஸ்தர்கள் ஊடகங்களின் முன்பாக தோற்றி, தங்கள் பக்க நியாயங்களை முன்வைப்பார்கள். இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர்களான யோசித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை பார்வையிடுவதற்காக சென்றிருந்த அவருடைய சகோதரர்களில் ஒருவரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, கொழும்பில் இருந்து தங்கல்லைக்குச் சென்ற பொலிஸார், அவரை கைது செய்து, கொழும்புக்கு பாதுகாப்பாக விசாரணைக்கு அழைத்து வந்துள்ளனர். அதற்கு எவ்வளவு செலவாகியிருக்கும். இந்த வீண் விரயத்தை பாதாள உலகக் கோஷ்டியினரை அழிக்க பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த அரசாங்கங்களில் இடம்பெற்ற ஊழல்,மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அம்பலப்படுத்தி வருகின்றது. அந்த நடவடிக்கை இன்னும் துரிதப்படுத்தப்பட வேண்டும். ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்கள், கோப்புகள், தேசிய மக்கள் அரசாங்கத்திடம், இருக்கிறது என்றால், அத்தனை பேருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்து வெளிநாட்டு பயணத்தடை பெற்றுக்கொண்டால், அழைக்கும் போதெல்லாம், விசாரணைக்கு அவர்கள் வந்தே ஆகவேண்டும்.

இதனூடாக, அவர்களை விரட்டிச் சென்று பிடிக்கவேண்டிய தேவை ஏற்படாது. அத்துடன், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுகளுக்கு இழக்காகவேண்டிய அவசியமும் இல்லை என்பதே எமது கருத்தாகும்.

கடந்த கால நிர்வாகங்களின் போது பொது நிதியை தவறாக பயன்படுத்தியவர்களின் பட்டியலைத் தொகுக்க முடியும், மேலும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்படாத அரசியல்வாதிகள் யாராவது இருந்தால், அவர்கள் மிகக் குறைவாகும்.

அடுத்தடுத்த ஆட்சிகளின் போது திருடர்களை பிடிப்பது பிரபலமான முழக்கமாக இருந்தபோதிலும், எந்தவொரு திருடனுக்கும் எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விசாரணைகளின் போது போதுமான ஆதாரங்கள் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு வருகிறது.

அரசியல்வாதிகள், அதிகாரத்தைப் பெற்றவுடன், தங்களுக்குள் ஒரு பெருமையை வளர்த்துக் கொண்டு, மக்களின் அபிலாஷைகளுடன் விளையாடுகிறார்கள். சட்டத்தின் ஓட்டைகளை-பதுங்கி, தேசிய செல்வத்தைத் தங்கள் சொந்தக் கணக்குகளில் திணிக்கும் அதிகார வெறி கொண்ட அரசியல்வாதிகளைப் பற்றி மட்டும் பேசுவதில் அர்த்தம் இல்லை. இந்தப் பட்டியல் அவ்வளவு நீளமானது.

இந்த ஊழல் அரசியல்வாதிகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றுவது அவசியம். அவர்களை மொத்தமாக கைது செய்து சிறைகளை நிரப்புவது நீதியை நிலைநாட்டாது. அவர்களால் அழிக்கப்பட்ட தேசிய செல்வம் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு மீண்டும் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கான குறிப்பிட்ட வழிமுறைகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகும்.


தமிழ்Mirrorக்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மாற்றம் ஏற்பட வேண்டும்

**லக்ஸ்மன்**

இலங்கையின் ஒற்றையாட்சி முறைமையே இனப்பிரச்சினைக்கு காரணமாக அமைந்திருப்பதாகவும், தாம் சமஷ்டி தீர்வையே கோரி நிற்பதா கவும் நாட்டுக்கு அண்மையில் விஜயம் செய்த கனேடிய உலகளாவிய விவகாரங்களுக்கான தெற்காசிய தொடர்புகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் மேரி லூயிஸ் ஹனனிடம் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற பிரதிநிதிகள் தெரிவித்தனர். அதே நேரத்தில் சமஷ்டி தொடர்பில் சிங்கள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கனடா நிதியுதவி அளிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கை நாட்டுக்குள் இருக்கின்ற சிங்கள மக்களுக்கு இனப்பிரச்சினை தொடர்பிலும் சமஷ்டி தீர்வு திட்டம் தொடர்பிலும் இதுவரையில் தெளிவின்மை காணப்படுகிறது என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. அதே நேரத்தில், இதுவரை காலமும் நடைபெற்று வந்த தமிழர்களின் அரசியல் அபிலாசை தொடர்பாக சிங்கள மக்கள் அறிந்து கொள்ளவில்லை என்பதாகவும் கொள்ளமுடிகிறது. அத்துடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய அதிகாரத்துக்கு வந்தவுடன் விடுத்திருந்த அறிவிப்புகள், தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று கேட்ட கேள்விக்கு தற்போது ஆட்சியிலிருக்கும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைக்கொள்ளும் நாட்டில் இனப்பிரச்சினை இல்லை என்ற கருத்துக்களுக்கும் இணையானதாக இருப்பதாக கொள்ள முடியும்.

கடந்த வருடத்தின் இறுதியில் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட காலத்தில், இனச் சிக்கல் இணைப்பாட்சி அரசியல் யாப்பு மூலம் தீர்த்து வைக்க தேசிய மக்கள் சக்தி உளமார முன் வருமேயானால் தமிழ் மக்களது ஆதரவு அந்தக் கட்சிக்கு இருக்கும் என்ற வகையில் கருத்துக்கள் பரவலாக வெளிவந்தன. அதற்காக, அதை தமிழ் மக்கள் கருத்திலெடுத்து தான் அக் கட்சிக்கு வாக்களித்தார்கள் என்று அர்த்தப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளாக இருந்த மஹிந்த ராஜபக்ச, கோட்டபாய ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மீது காண்பித்து வந்த எதிர்ப்பினைவிடவும் கடுமையான எதிர்ப்பை அனுர குமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு எதிராக தமிழ் அரசியல் தரப்பினர் தற்போது காண்பித்து வருகின்றனர்.

மார்க்சீசம் பேசிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ரொஸ்க்கீசத்தை வெளிப்படுத்தி வந்த லங்கா சமசமாஜக் கட்சி போன்றன பின்நாளில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத நிலைப்பாட்டை கை கொண்டிருக்கின்றன.

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்த சில இடதுசாரி கட்சிகள் காலப்போக்கில் அதை ஏற்றுக் கொண்டிருந்தது. சிங்களம் மட்டும் சட்டத்திற்கு தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பு காரணமாக அப்போதைய பிரதமர் பண்டாரநாயக்க தந்தை செல்வாவோடு உடன்படிக்கை கைச்சாத்திட்டார்.

இருப்பினும், பௌத்த இனவாதிகளின் எதிர்ப்பு காரணமாக அந்த உடன்படிக்கை கிழித்தெறியப்பட்டது. இதனை அடுத்து தந்தை செல்வா 1961 ஏப்ரல் 14இல் தமிழ் அரசை அறிவித்தார்.

தமிழரசுக் கட்சி நடத்திய சட்ட மறுப்பு போராட்டத்தை இடதுசாரிகளின் ஆதரவோடு ஆட்சியிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி அடக்குமுறைகளை கைக்கொண்டது. 1965 இல் ஆட்சிக்கு வந்த டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் டட்லி - செல்வா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதை சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை சமசமாஜ கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி கேலி செய்ததுடன் கடுமையான போராட்டங்களை நடத்தினர். அதன் பலனாக 1968 யூலையில் அவ் உடன்படிக்கையும் கிடப்பில் போடப்பட்டது. அந்த வகையில் இடதுசாரிச் சிந்தனை உடையவர்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் தடையாகவே இருந்து வந்துள்ளனர்.

இடதுசாரிச் சிந்தனையுடனும் கொள்கையுடனும் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி என்கிற ஜே.வி.பி. பின்நாளில் தமிழ் மக்களுடைய போராட்டத்தை இனவாதச் சிந்தனையுடன் அணுகியது. யுத்தத்தினை தீவிர படுத்துவதற்காக பெரும்பான்மையான சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் இணைத்துக் கொடுத்திருந்தனர். அது தமிழ் மக்களின் போராட்டத்தை அடக்குவதற்கான ஒத்துழைப்பே.

அப்படியானால் அவர்களுடைய சிந்தனை முழுவதும் தமிழ் மக்களது போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் என்பதாகவே இருந்திருக்க வேண்டும். விமல் வீரவங்க ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளராக இருந்த காலங்கள் இனவாதம் கடுமையாக கக்கிய காலங்களாகும். பின்னர் அவர் தேசிய சுதந்திர முன்னணியை ஆரம்பித்து பிரிந்து சென்றிருந்தாலும் மக்கள் விடுதலை முன்னணி முழுமையான இடது சாரிக் கொள்கையுடைய கட்சியாக மாற்றம் பெற்றிருக்கவில்லை.

காலம் கனியும் வரை காத்திருந்த மக்கள் விடுதலை முன்னணி கொரானா மற்றும் கோத்தபாயவின் சீர்திருத்த முயற்சிகளின் பயனாக உருவான பொருளாதார நெருக்கடி போன்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தியாக நாட்டில் ஆட்சியை கைப்பற்றி கொண்டிருக்கிறது. ஆனால் அதுவும் நாட்டில் இருக்கின்ற தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை மூடி மறைத்து, நாட்டிற்குள் எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லை என்ற மாயையை வெளிக்காட்டி புதிய அரசியலமைப்பை உருவாக்கப் போகிறோம் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறது. அரசியலமைப்பு திருத்தங்கள் 22வரை நீண்டிருந்த போதிலும் நாட்டுக்குள் இருக்கும் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியவில்லை. இந்த நிலையில் புதிய அரசியலமைப்பு தீர்வைத் தருமா என பொறுத்திருந்து பார்க்க முடியும் என்றாலும் பெரும்பான்மையை வைத்திருக்கின்ற ஒரு அரசாங்கம் தாம் உருவாக்கும் அரசியலமைப்பினை பெரும்பான்மையுடன் நிறைவேற்றிவிட முடியும். இது கடந்த காலங்களில் சோசலிச, இடதுசாரிப் போக்கு உடையவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றிய பட்டறிவுகளும் காரணமாக இருக்கலாம்.


இந்த நிலையில்தான் தமிழ் அரசியல் தரப்பினரிடம் காணப்படுகின்ற பச்சாதாபங்கள் அரசியலமைப்பின் உருவாக்கத்தில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதற்கான வாய்ப்புகளை இல்லாமல் செய்துவிடுமா என்ற சந்தேகம் தமிழ் மக்களிடம் ஏற்படத் தொடங்கி இருக்கிறது.

இலங்கை தமிழரசு கட்சி இன்னமும் நம்முடைய தலைவர் நியமனத்தில் முடிவுக்கு வரவில்லை. கட்சிக்குள் வெட்டுக் குத்துக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஒரு நிலைப்பாடு அவர்களிடம் காணப்பட்டாலும் தமிழ் மக்களின் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கான தீர்வாக அது இருக்குமா என்பது தெரியாது. நாடாளுமன்ற, மாகாண, உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் தமக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பது தமது அரசியல் நிலைப்பாடு தொடர்பான அனைத்து விதமான விடயங்களையும் நீங்களே கையாளலாம் என்பதற்கான ஆணையல்ல என்பதைப் புரிந்து கொள்வதில் தமிழரசுக்கட்சிக்கு முடியாமல் இருக்கிறது. அதற்குக் காரணம், ஏனைய கட்சிகளுக்கு தேர்தல்களில் மக்கள் வழங்கிய ஆதரவினையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள் என்பதுதான். தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாகத் தம்மைக் காண்பித்துக் கொள்ள முனையும் தமிழரசுக்கட்சி ஏனைய கட்சிகளோடும் ஏனைய அரசியல் தரப்பினரோடும் இணைந்து செயற்படுவதற்கு இப்போதும் பின்நிற்பது தேர்தல் அரசியல் மீது கொண்டுள்ள நம்பிக்கையிலேயே தவிர தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை நிறைவேற்றத்துக்கல்ல என்பது இந்த இடத்தில், முக்கியமானது.

இக் கருத்தாடல் தோன்றுவதற்குக் காரணம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரெலோவின் தலைவரும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருக்கிடையில் இம்மாத ஆரம்பத்தில் நடைபெற்ற சந்திப்பில் தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு 25ஆம் திகதியை தீர்மானித்திருந்தனர். இருந்த போதிலும் கடந்த வாரம் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில், பதில் தலைவர் சி.வி. கே.சிவஞானம் இவ்விடயம் தொடர்பில் ஏனைய ஆராயவும் கலந்துரையாடவும் 7 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டமையினால் 25ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த முத்தரப்புக் கூட்டம் கைவிடப்பட்டு இருதரப்பு சந்திப்பாக மாறி இன்றைய தினம் 27ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. இது ஒருவகையில் தமிழரசுக்கட்சியின் தனிவழியாகவே

இவ்வாறு தமிழ்த் தரப்பிடம் காணப்படும் இணைந்து போகாத, இசைந்து செயற்பட முடியாத நிலைமையானது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை எவ்வாறு பூரணமானதாக நிறைவேற்றும் என்பதுதான் குழப்பகரமானது. இது ஒருவகையில் தேசிய மக்கள் சக்தி சொல்வதைப்போல தாம் தனித்து செய்து முடிப்போம் என்பதற்கு ஒப்பானதும் கூட. தமிழர்களின் அரசியல் அபிலாசை சார் நிலைப்பாட்டின் பிறழ்வுக்கும் நாட்டின் தலைவர்களின், சிங்கள மக்களின் இனப்பிரச்சினை தொடர்பான தெளிவின்மைக்கும் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடு சார் குழப்பங்களே காரணமாக இருக்கலாம்.

இடதுசாரிகளாக காண்பிக்கும் ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலேனும் நாட்டிற்குள் புரையோடிப் போயிருக்கும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று நம்புவோம். அதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விட்டுக்கொடுக்காத தன்மையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

குடும்ப உறுப்பினர்களிடையே பொய்களை தாராளமாக உபயோகித்தால், அந்தக் குடும்பத்தில் நிம்மதி கிட்டாது. எதையும் ஒளித்து மறைப்பது, வெளிப்படைத் தன்மை இன்றிப் பழகினால், அவர்களிடம் உண்மைத் தன்மையே அற்றுப் போய்விடும்.

ஒருவரை ஒருவர் நம்பாமல் நடந்தால், அவர்களிடம் கோபதாபம் தானாகவே வந்துவிடும். குடும்பத்தில் எல்லா உறுப்பினர்களும் மனம்விட்டுப் பேச வேண்டும். இதனால் குடும்ப உறவு மேலோங்கும்.

குடும்ப உறவு ஒரு பரம்பரையுடன் முடிவதில்லை. எதிர்காலத்துடன் வளர்ந்து செழிக்க வேண்டிய பந்தங்கள். குடும்ப உறவுகளை சிதைக்கக் கூடாது. வீட்டில் உள்ள பிள்ளைகளுடன் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். பொய்களைப் பேசி அவர்களை ஏமாற்ற லாகாது.

கல்வி கற்றலில் மட்டுமல்ல; ஒழுக்க நெறி, பக்தி மார்க்கம், பெரியவர்களை மதித்து நடத்தல் என்பவை இளமைப் பராயத்திலேயே ஊட்டப்பட வேண்டும்.

குடும்பங்கள் எல்லாம் இணைந்ததே, இந்தப் பரந்த உலகம். தனித்து வாழ்வது அல்ல; பொறுப்பு, நம்பிக்கையுடன் வாழ்க்கை அமைத்தால், அது போல் இன்பம் வேறேது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மீன்வாடியை அகற்ற கோரிக்கை

மட்டக்களப்பு, அட்டிக்கழி ஸ்ரீ திரௌபதா தேவி ஆலயம் பராமரித்து வந்த அம்மன் பீடம் உள்ள காணியை மட்டு மாநகர சபையினர் தனியார் ஒருவருக்கு மீன்வாடி அகற்றப்படாமல் உள்ளது என மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

முறைகேடாக வழங்கிய மீன்வாடியை அங்கிருந்து அகற்றுமாறு கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு மற்றும் மனித உரிமை ஆணையம் கட்டளை இட்டும் இதுவரை அகற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

பார்வீதியில் செழியன் பூங்காவிற்கு அருகில் கடற்கரை பகுதியில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காணியை மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதா தேவி ஆலய நிர்வாகம் 50 வருடத்திற்கு மேலாக சட்டவிரோத மண் அகழ்வு மற்றும் காணி அபகரிப்பில் இருந்து பாதுகாத்து ஆலய உற்சவ காலங்களில் புனித மஞ்சள் நீராடுதல், கும்பம் சொரிதல் போன்ற புனித காரியங்களுக்காக பயன்படுத்தி வந்ததுடன் அங்கு வேல் நாட்டப்பட்டு அம்மன் பீடம் அமைக்கப்பட்டு வழிபட்டு வந்தனர்.

மீன்வாடியை அகற்றும் செயற்பாடு இன்று வரை செய்யாமல் உள்ளனர் எனவே இது இந்து மத்திற்கு மக்களுக்கு செய்யும் அநீதி என ஆலய பரிபாலனசபை மற்றும் பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனகராசா சரவணன்

# இந்தியாவின் 76 ஆவது குடியரசு தின நிகழ்வுகள்

இந்தியாவின் 76 ஆவது குடியரசு தின நிகழ்வுகள், இலங்கையில், வெகுசிறப்பாக இடம்பெற்றன. இந்திய உதவி உயர்ஸ்தானிகர்,

டாக்டர் சத்யஞ்சல் பாண்டே தலைமையில், கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில், ஞாயிற்றுக்கிழமை (26) இந்திய தேசிய கொடி ஏற்றலுடன் நிகழ்வுகள் இடம்பெற்றன.

படங்கள்: கித்சிறி டி மெல்














## யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள்...

இந்தியாவின் 76வது குடியரசு தினம், வெகு விமர்சையாக ஞாயிற்றுக்கிழமை (26) அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டி யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில் விசேட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மருதடி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தில், யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி தலைமையில் நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. துணைத் தூதுவரால் இந்திய தேசிய கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து குடியரசு தின வாழ்த்து செய்தி வாசிக்கப்பட்டது. இந்திய தேசபக்திப் பாடல்கள், நடனங்கள் கவிதைகள் என்பன ஆற்றப்பட்டன.

பு.கஜிந்தன்











## கண்டியில் இடம்பெற்ற நிகழ்வுகள்...

இந்தியாவின் 76வது குடியரசு தின நிகழ்வுகள், கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் திருமதி. வீ.எஸ்.சரண்யா தலைமையில் கண்டியிலுள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு மலையகத்தில் வாழும் இந்திய குடும்பங்கள் உட்பட அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் பிரதிநிதிகள் மற்றும் அனுநாயக்க தேரர்கள், இந்து, இஸ்லாமிய சமய பெரியோர்கள், அரசியல் பிரமுகர்கள், கண்டி தமிழ் வர்த்தகர் சங்க பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர்.

இதன்போது இந்திய தேசியக்கொடி ஏற்றப்பட்டு இந்தியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அதன் பின்னர், இந்திய குடியரசு தலைவரின் ஆசிச் செய்தியை உதவி உயர்ஸ்தானிகர் திருமதி. வீ.எஸ்.சரண்யா வாசித்தார்.

எஸ்.கணேசன், பா.திருஞானம்











அமெரிக்கா



# நிதி உதவியை நிறுத்தினார் ட்ரம்ப்

உலகின் பல்வேறு நாடுகளில் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு பயிற்சி உள்ளிட்ட திட்டங்களுக்காக அமெரிக்கா அளித்து வந்த நிதி உதவியை நிறுத்த ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.


இதை நடைமுறைப்படுத்த அந்தந்த நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்களுக்கு, சனிக்கிழமை (25) உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்காக கடந்த 2023ஆம் ஆண்டு சுமார் 60 பில்லியன் (அந்நாட்டின் பட்ஜெட்டில் 1%) ஒதுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்

பாலஸ்தீனியர்களை

# விடுவிக்க மறுக்கும் இஸ்ரேல்




பாலஸ்தீனியர்களை வடக்கு காசாவுக்கு திரும்ப அனுமதிக்கமாட்டோம் என்று, இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸேரல், காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழு இடையே ஓராண்டுக்கு மேல் நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணய கைதிகளில் 7 பெண்களை இதுவரை விடுதலை செய்துள்ளது. இதற்கு ஈடாக 290 பாலஸ்தீனியர்களை இஸேரல் விடுதலை செய்துள்ளது. குறிப்பாக, சனிக்கிழமை (25) இஸ்ரேலிய இராணுவ வீராங்கனைகள் 4 பேரை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. இதற்கு ஈடாக 200 பாலதீனியர்களை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

பணய கைதிகளில் அர்பெல் யாஹுட் என்ற இஸேரலிய பெண்ணையும் ஹமாஸ் ஆயுதக்குழு, சனிக்கிழமை (25) விடுதலை செய்ய வேண்டுமென, இஸேரல் தெரிவித்திருந்தது. ஆனால், அர்பெல் யாஹுட்டை, ஹமாஸ் ஆயுதக்குழு விடுதலை செய்யவில்லை.

இந்நிலையில், அர்பெல் யாஹுட் விடுதலை செய்யப்படும் வரை பாலஸ்தீனியர்களை வடக்கு காசாவுக்கு திரும்ப அனுமதிக்கமாட்டோம் என்று, இஸேரல் தெரிவித்துள்ளது.

"போர் நிறுத்த ஒப்பந்தப்படி அர்பெல் யாஹுட் சனிக்கிழமை (25) விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அர்பெல் யாஹுட்டை ஹமாஸ் விடுதலை செய்யவில்லை. ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டது. இதனால், அர்பெல் யாஹுட் விடுதலை செய்யப்படும்வரை வடக்கு காசாவுக்கு பாலஸ்தீனியர்களை திரும்ப அனுமதிக்கமாட்டோம்" என, இஸேரல் தெரிவித்துள்ளது.

அதேவேளை, பணய கைதி அர்பெல் யாஹுட் உயிருடன் இருப்பதாகவும், வரும் சனிக்கிழமை அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் ஹமாஸ் ஆயுதக்குழு தெரிவித்துள்ளது.

புதுடெல்லி

மோடி தலைமையிடம் இருந்து

# 'நிறைய கற்றுக்கொண்டேன்'



"இந்திய பிரதமர் மோடியின் தலைமைத்துவம் மற்றும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடனான பணியில் இருந்து நிறைய கற்று கொண்டேன்" என, இந்தோனேசிய ஜனாதிபதி கூறியுள்ளார்.

நாட்டின் 76ஆவது குடியரசு தின கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காக, இந்தோனேசிய ஜனாதிபதி பிரபோவோ சுபியந்தோ இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

அவருடைய முதல் இந்திய பயணம் இதுவாகும். அவரை ஜனாதிபதி முர்மு மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிலையில், டெல்லியில் நடந்த சிறப்பு விருந்து நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின் கூட்டத்தின் முன் இந்தோனேசிய ஜனாதிபதி சுபியந்தோ பேசும்போது,

"இந்தியாவுக்கு வருகை தந்ததற்காக நான் பெருமை கொள்கிறேன். பிரதமர் மோடியின் தலைமைத்துவம் மற்றும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடனான பணி ஆகியவற்றில் இருந்து நான் நிறைய கற்று கொண்டேன்.

"வறுமையை ஒழிப்பது, விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு உதவுவது மற்றும் சமூகத்தில் பலவீன நிலையில் உள்ளவர்களுக்கு உதவுவது ஆகிய அவருடைய பணிகள் எங்களுக்கு உத்வேகம் ஏற்படுத்துகிறது.

"இதேபோன்று, வருகிற ஆண்டுகளில் இந்திய மக்களுக்கு வளமும், அமைதியும் மற்றும் சிறந்த விசயங்கள் வந்து சேரட்டும்" என்றார்.

# புதுடெல்லியில்



இந்திய நாட்டின் 76ஆவது குடியரசு தின விழா, ஞாயிற்றுக்கிழம (26) கொண்டாடப்பட்டது.

76ஆவது குடியரசு தின விழாவையொட்டி டெல்லியில் ஜனாதிபதி திரௌபதி முர்மு தேசிய கொடியை ஏற்றினார். ஜனாதிபதி கொடியேற்றி வைத்ததும் வானில் ஹெலிகாப்டரில் இருந்து மலர்கள் தூவப்பட்டன.

குடியரசு தின விழாவில் 21 பீரங்கி குண்டுகள் முழங்க தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

குடியரசு தின கொண்டாட்டங்கள் புதுடெல்லியில் உள்ள கர்தவ்யா பாதை (கடமை பாதை) பகுதியில் நடைபெற்றது.

குடியரசு தினவிழாவில் இந்தோனேசிய ஜனாதிபதி பிரபோவா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

தமிழகம்

பாடசாலையில்

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி

பாடசாலையில் மின்சாரம் தாக்கி மாணவன் பலியான சம்பவம் தொடர்பாக அப்பாடசாலையின் அதிபர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, தாலுகா பத்தரசன்கோட்டை கிராமத்தை சேர்ந்த சக்தி சோமையா (வயது 14) என்ற சிறுவன், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியை அடுத்த பொய்யாவயல் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலை பாடசாலையில் 9ம் வகுப்பில் படித்து வந்தார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (24), கணினி பயிற்சிக்காக பள்ளியில் கம்ப்யூட்டரை இயக்க சுவிட்சை தொட்ட போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி, குறித்த சிறுவன் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள், பாடசாலைக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர்.

இதையடுத்து, பாடசாலை அதிபரை பணியிடை நீக்கம் செய்து முதன்மை கல்வி அலுவலர் உத்தரவிட்டார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், இதில் அஜாக்கிரதையாக இருந்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதன்மை கல்வி அலுவலர் தெரிவித்தார்.

உயிரிழந்த மாணவனின் குடும்பத்துக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.5 இலட்சம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

இரண்டாவது போட்டியிலும்

# இங்கிலாந்தை வென்ற இந்தியா




இங்கிலாந்துக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரில், சென்னையில் சனிக்கிழமை (25) நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இங்கிலாந்து: 165/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் 45 (30), பிறைடன் கார்ஸ் 31 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 2/32 [4], வருண் சக்கரவர்த்தின் 2/38 [4], ஹர்திக் பாண்டியா 1/6 [2], வொஷிங்டன் சுந்தர் 1/9 [1], அபிஷேக் ஷர்மா 1/12 [1], அர்ஷ்டீப் சிங்க் 1/40 [4])

இந்தியா: 166/8 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: திலக் வர்மா ஆ.இ 72 (55), வொஷிங்டன் சுந்தர் 26 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிறைடன் கார்ஸ் 3/29 [4], அடில் ரஷீட் 1/14 [4], லியம் லிவிங்ஸ்டோன் 1/14 [2])

போட்டியின் நாயகன்: திலக் வர்மா

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்:


## சம்பியனான மடிஸன் கீஸ்



அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் ஐக்கிய அமெரிக்காவின் மடிஸன் கீஸ் சம்பியனானார்.

சனிக்கிழமை (25) நடைபெற்ற தனது இறுதிப் போட்டியில் முதல்நிலை வீராங்கனையான அர்யான சபலெங்காவை எதிர்கொண்ட கீஸ், 6-3, 2-6, 7-5 என்ற செட் கணக்கில் வென்று சம்பியனானார்.

தனது அரையிறுதிப் போட்டியில் இரண்டாம் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக்கை கீஸும், தனது அரையிறுதிப் போட்டியில் ஸ்பெய்னின் பௌலா படோஸாவை பெலாரஸின் சபலெங்காவும் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தனர்.




ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் அத்லெட்டிகோ - வில்லாறியல் போட்டி

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (25) நடைபெற்ற வில்லாறியலுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் சமப்படுத்தியது.

வில்லாறியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜெரார்ட் மொரேனோ பெற்றதோடு, மட்ரிட் சார்பாகப் பெறப்பட்ட கோலை சாமுவேல் லினோ பெற்றிருந்தார். 45 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட் காணப்படுகின்றது. தலா 39 புள்ளிகளுடன் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் மூன்றாம், நான்காமிடங்களில் பார்சிலோனாவும், அத்லெட்டிக் பில்பாவோவும் காணப்படுகின்றன. இதில் ஏனைய அணிகளை விட றியல் மட்ரிட்டும், அத்லெட்டிகோ மட்ரிட்டும் ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 49 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்ரிட் காணப்படுகின்றது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## ஜுவென்டஸை வென்ற நாப்போலி



இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (25) நடைபெற்ற ஜுவென்டஸுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றது.

நாப்போலி சார்பாக அன்ட்ரே-பிராங்க் ஸம்போ அங்குய்ஸா, றொமெலு லுக்காக்கு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை ரன்டல் கோலோ முவானி பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 53 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. 47 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் இன்டர் மிலனும், 46 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 39 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் லேஸியோவும் காணப்படுகின்றன.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## செல்சியை வீழ்த்திய மன்செஸ்டர் சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (25) நடைபெற்ற செல்சியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

சிற்றி சார்பாக ஜொஸ்கோ கவிரால், எர்லிங் பிறோட் ஹலான்ட், பில் பொடென் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை மடுகே பெற்றார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 53 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் காணப்படுகின்றது. 47 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 44 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும் காணப்படுகின்றன. தலா 41 புள்ளிகளுடன் சிற்றியும், நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தில் நான்காமிடத்தில் சிற்றியும், ஐந்தாமிடத்தில் நியூகாசிலும் காணப்படுகின்றன. இதில் ஏனைய அணிகளை விட ஒரு போட்டி குறைவாக லிவர்பூல் விளையாடியுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 27, ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.